ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# திவ்ய பிரபந்தம் போற்றும் திருப்பிருதி

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# திவ்ய பிரபந்தம் போற்றும் திருப்பிருதி

## பொதுத்தனியன்கள்

ராமாநுஜ த$_3$யாபாத்ரம் ஜ்ஞாநவைராக்$_3$ய பூ$_4$ஷணம் ।
ஸ்ரீமத்$_3$வேங்கடநாதா$_2$ர்யம் வந்தே$_3$ வேதா$_3$ந்ததே$_3$ஶிகம் ॥ 1 ॥

ஸ்ரீஶைலேஶ த$_3$யாபாத்ரம் தீ$_4$ப$_4$க்த்யாதி$_3$கு$_3$ணார்ணவம் ।
யதீந்த்$_3$ரப்ரவணம் வந்தே$_3$ ரம்யஜாமாதரம் முநிம் ॥ 2 ॥

லக்ஷ்மீநாத$_2$ஸமாரம்பா$_4$ம் நாத$_2$யாமுநமத்$_4$யமாம் ।
அஸ்மதா$_3$சார்யபர்யந்தாம் வந்தே$_3$ கு$_3$ருபரம்பராம் ॥ 3 ॥

யோ நித்யமச்யுதபதா$_3$ம்பு$_3$ஜயுக்$_3$மருக்ம -
வ்யாமோஹதஸ்ததி$_3$தராணி த்ரு'ணாய மேநே ।
அஸ்மத்$_3$கு$_3$ரோர்ப$_4$க$_3$வதோஸ்ய த$_3$யைகஸிந்தோ$_4$:
ராமாநுஜஸ்ய சரணௌ ஶரணம் ப்ரபத்$_3$யே ॥ 4 ॥

மாதா பிதா யுவதயஸ்தநயா விபூ$_4$தி:
ஸர்வம் யதே$_3$வ நியமேந மத$_3$ந்வயாநாம் ।
ஆத்$_3$யஸ்ய ந: குலபதேர்வகுளாபி$_4$ராமம்
ஸ்ரீமத் தத$_3$ங்க்$_4$ரியுக$_3$ளம் ப்ரணமாமி மூர்த்$_4$நா ॥ 5 ॥

பூ$_4$தம் ஸரஶ்ச மஹதா$_3$ஹ்வய ப$_4$ட்டநாத$_2$
ஸ்ரீப$_4$க்திஸார குலஶேக$_2$ர யோகி$_3$வாஹாந் ।
ப$_4$க்தாங்க்$_4$ரிரேணு பரகால யதீந்த்$_3$ர மிஶ்ராந்
ஸ்ரீமத் பராங்குஶமுநிம் ப்ரணதோऽஸ்மி நித்யம் ॥ 6 ॥

## பெரியாழ்வார் தனியன்கள்

கு$_3$ருமுக$_2$மநதீ$_4$த்ய ப்ராஹ வேதா$_3$நஶேஷாந்
நரபதிபரிக்லு’ப்தம் ஶுல்கமாதா$_3$துகாம: ।
ஶ்வஶுரமமரவந்த்$_3$யம் ரங்க$_3$நாத$_2$ஸ்ய ஸாக்ஷாத்
த்$_3$விஜகுலதிலகம் தம் விஷ்ணுசித்தம் நமாமி ॥

மின்னார் தட மதிள் சூழ் வில்லிபுத்தூர் என்றொரு கால் ⋆
சொன்னார் கழற்கமலம் சூடினோம் ⋆
முன்னாள் கிழி அறுத்தான் என்றுரைத்தோம் ⋆
கீழ்மையினிற் சேரும் வழி அறுத்தோம் நெஞ்சமே ! வந்து

பாண்டியன் கொண்டாடப் பட்டர்பிரான் வந்தான் என்று ⋆
ஈண்டிய சங்கம் எடுத்தூத ⋆
வேண்டிய வேதங்களோதி விரைந்து கிழி அறுத்தான் ⋆
பாதங்கள் யாமுடைய பற்று

## பெரியாழ்வார் திருமொழி – திருப்பல்லாண்டு

‡ பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு ⋆
பல கோடி நூறாயிரம் ⋆
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா ! ⋆
உன் சேவடி செவ்வி திருக்காப்பு ॥ **1.1.1** ॥

‡ அடியோமோடும் நின்னோடும் ⋆
பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு ⋆
வடிவாய் நின் வல மார்பினில் ⋆
வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு ⋆
வடிவார் சோதி வலத்துறையும் ⋆
சுடராழியும் பல்லாண்டு ⋆

படை போர் புக்கு முழங்கும் ⋆
அப்பாஞ்சசன்னியமும் பல்லாண்டே ॥ **1.1.2** ॥

வாழாட் பட்டு நின்றீர் உள்ளீரேல் ⋆
வந்து மண்ணும் மணமும் கொண்மின் ⋆
கூழாட் பட்டு நின்றீர்களை ⋆
எங்கள் குழுவினில் புகுதலொட்டோம் ⋆
ஏழாட் காலும் பழிப்பிலோம் நாங்கள் ⋆
இராக்கதர் வாழ் ⋆
இலங்கை பாழாளாகப் படை பொருதானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுதுமே ॥ **1.1.3** ॥

ஏடு நிலத்தில் இடுவதன் முன்னம் வந்து ⋆
எங்கள் குழாம் புகுந்து ⋆
கூடு மனம் உடையீர்கள் வரம்பொழி ⋆
வந்தொல்லைக் கூடுமினோ ⋆
நாடு நகரமும் நன்கறிய ⋆
நமோ நாராயணாயவென்று ⋆
பாடு மனம் உடைப் பத்தர் உள்ளீர் ! ⋆
வந்து பல்லாண்டு கூறுமினே ॥ **1.1.4** ॥

அண்டக்குலத்துக்கதிபதி ஆகி ⋆
அசுரர் இராக்கதரை ⋆
இண்டைக் குலத்தை எடுத்துக் களைந்த ⋆
இருடீகேசன் தனக்கு ⋆
தொண்டக் குலத்தில் உள்ளீர் ! வந்தடி தொழுது ⋆
ஆயிர நாமம் சொல்லி ⋆

பண்டைக் குலத்தைத் தவிர்ந்து ⋆
பல்லாண்டு பல்லாயிரத்தாண்டென்மினே ॥ **1.1.5** ॥

எந்தை தந்தை தந்தை தந்தை தம் மூத்தப்பன் ⋆
ஏழ் படி கால் தொடங்கி ⋆
வந்து வழிவழி ஆட்செய்கின்றோம் ⋆
திருவோணத் திருவிழவில் அந்தியம் போதில் அரியுருவாகி ⋆
அரியை அழித்தவனை ⋆
பந்தனை தீரப் பல்லாண்டு ⋆
பல்லாயிரத்தாண்டென்று பாடுதுமே ॥ **1.1.6** ॥

தீயிற் பொலிகின்ற செஞ்சுடர் ஆழி ⋆
திகழ் திருச்சக்கரத்தின் ⋆
கோயிற்பொறியாலே ஒற்றுண்டு நின்று ⋆
குடிகுடி ஆட்செய்கின்றோம் ⋆
மாயப் பொருபடை வாணனை ⋆
ஆயிரந் தோளும் பொழி குருதி பாய ⋆
சுழற்றிய ஆழி வல்லானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுதுமே ॥ **1.1.7** ॥

நெய்யிடை நல்லதோர் சோறும் ⋆
நியதமும் அத்தாணிச் சேவகமும் ⋆
கையடைக் காயும் கழுத்துக்குப் பூணொடு ⋆
காதுக்குக் குண்டலமும் ⋆
மெய்யிட நல்லதோர் சாந்தமும் தந்து ⋆
என்னை வெள்ளுயிர் ஆக்க வல்ல ⋆
பையுடை நாகப் பகைக்கொடியானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுவனே ॥ **1.1.8** ॥

உடுத்துக் களைந்த நின் பீதகவாடை உடுத்துக் ⋆
கலத்ததுண்டு ⋆
தொடுத்த துழாய்மலர் சூடிக் களைந்தன ⋆
சூடுமித்தொண்டர்களோம் ⋆
விடுத்த திசைக் கருமம் திருத்தித் ⋆
திருவோணத் திருவிழவில் ⋆
படுத்த பைந்நாகணைப் பள்ளிகொண்டானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுதுமே ॥ **1.1.9** ॥

எந்நாள் எம்பெருமான் ⋆
உன்தனக்கடியோம் என்றெழுத்துப்பட்ட அந்நாளே ⋆
அடியோங்கள் அடிக்குடில் ⋆
வீடு பெற்றுய்ந்தது காண் ⋆
செந்நாள் தோற்றித் ⋆
திருமதுரையுள் சிலைகுனித்து ⋆
ஐந்தலைய பைந்நாகத் தலை பாய்ந்தவனே ! ⋆
உன்னைப் பல்லாண்டு கூறுதுமே ॥ **1.1.10** ॥

‡ அல்வழக்கொன்றும் இல்லா ⋆
அணி கோட்டியர் கோன் ⋆
அபிமான துங்கன் செல்வனைப்போலத் ⋆
திருமாலே ! நானும் உனக்குப் பழவடியேன் ⋆
நல்வகையால் நமோ நாராயணாவென்று ⋆
நாமம் பல பரவி ⋆
பல்வகையாலும் பவித்திரனே ! ⋆
உன்னைப் பல்லாண்டு கூறுவனே ॥ **1.1.11** ॥

‡ பல்லாண்டென்று பவித்திரனைப் ⋆
பரமேட்டியை ⋆
சார்ங்கம் என்னும் வில்லாண்டான் தன்னை ⋆
வில்லிபுத்தூர் விட்டுசித்தன் விரும்பிய சொல் ⋆
நல்லாண்டென்று நவின்றுரைப்பார் ⋆
நமோ நாராயணாயவென்று ⋆
பல்லாண்டும் பரமாத்மனைச் ⋆
சூழ்ந்திருந்தேத்துவர் பல்லாண்டே ‖ **1.1.12** ‖

## பெரிய திருமொழி – வாலிமாவலத்து

‡ வாலி மா வலத்தொருவனதுடல் கெட ⋆
வரி சிலை வளைவித்து ⋆
அன்று ஏலம் நாறு தண் தடம் பொழில் இடம் பெற ⋆
இருந்த நல் இமயத்துள் ⋆
ஆலி மா முகில் அதிர் தர அரு வரை ⋆
அகடுற முகடேறி ⋆
பீலி மா மயில் நடம் செயும் தடஞ்சுனைப் ⋆
பிருதி சென்றடை நெஞ்சே ‖ **1.2.1** ‖

கலங்க மாக் கடல் அரி குலம் பணி செய்ய ⋆
அரு வரை அணை கட்டி ⋆
இலங்கை மா நகர் பொடி செய்த அடிகள் தாம் ⋆
இருந்த நல் இமயத்து ⋆
விலங்கல் போல்வன விறல் இரும் சினத்தன ⋆
வேழங்கள் துயர் கூர ⋆
பிலம் கொள் வாள் எயிற்றரி அவை திரிதரு ⋆
பிருதி சென்றடை நெஞ்சே ‖ **1.2.2** ‖

துடி கொள் நுண் இடைச் சுரி குழல் ⋆
துளங்கெயிற்றிளம் கொடி திறத்து ⋆
ஆயர் இடி கொள் வெம் குரல் இனவிடை அடர்த்தவன் ⋆
இருந்த நல் இமயத்து ⋆
கடி கொள் வேங்கையின் நறு மலர் அமளியின் ⋆
மணி அறைமிசை வேழம் ⋆
பிடியினோடு வண்டிசை சொலத் துயில்கொளும் ⋆
பிருதி சென்றடை நெஞ்சே ॥ **1.2.3** ॥

மறம் கொள் ஆள் அரி உரு என வெருவர ⋆
ஒருவனதகல் மார்வம் திறந்து ⋆
வானவர் மணி முடி பணிதர ⋆
இருந்த நல் இமயத்துள் ⋆
இறங்கி ஏனங்கள் வளை மருப்பிடந்திடக் ⋆
கிடந்தருகெரி வீசும் ⋆
பிறங்கு மா மணி அருவியொடிழிதரு ⋆
பிருதி சென்றடை நெஞ்சே ॥ **1.2.4** ॥

கரை செய் மாக் கடல் கிடந்தவன் ⋆
கனை கழல் அமரர்கள் தொழுதேத்த ⋆
அரை செய் மேகலை அலர்மகள் அவளொடும் ⋆
அமர்ந்த நல் இமயத்து ⋆
வரை செய் மாக் களிறிள வெதிர் வளர் முளை ⋆
அளை மிகு தேன் தோய்த்து ⋆
பிரச வாரி தன் இளம் பிடிக்கருள் செயும் ⋆
பிருதி சென்றடை நெஞ்சே ॥ **1.2.5** ॥

பணங்கள் ஆயிரம் உடைய நல் அரவணைப் ⋆
பள்ளி கொள் பரமா என்று ⋆
இணங்கி வானவர் மணி முடி பணிதர ⋆
இருந்த நல் இமயத்து ⋆
மணம் கொள் மாதவி நெடும் கொடி விசும்புற ⋆
நிமிர்ந்தவை முகில் பற்றி ⋆
பிணங்கு பூம் பொழில் நுழைந்து வண்டிசை சொலும் ⋆
பிருதி சென்றடை நெஞ்சே ॥ **1.2.6** ॥

கார் கொள் வேங்கைகள் கனவரை தழுவிய ⋆
கறி வளர் கொடி துன்னிப் ⋆
போர் கொள் வேங்கைகள் புனவரை தழுவிய ⋆
பூம் பொழில் இமயத்துள் ⋆
ஏர் கொள் பூஞ்சுனைத் தடம் படிந்து ⋆
இன மலர் எட்டும் இட்டிமையோர்கள் ⋆
பேர்கள் ஆயிரம் பரவி நின்றடி தொழும் ⋆
பிருதி சென்றடை நெஞ்சே ॥ **1.2.7** ॥

இரவு கூர்ந்திருள் பெருகிய வரை முழை ⋆
இரும் பசி அது கூர ⋆
அரவம் ஆவிக்கும் அகன் பொழில் தழுவிய ⋆
அரு வரை இமயத்து ⋆
பரமன் ஆதி எம் பனி முகில் வண்ணன் என்று ⋆
எண்ணி நின்றிமையோர்கள் ⋆
பிரமனோடு சென்றடி தொழும் பெரும் தகைப் ⋆
பிருதி சென்றடை நெஞ்சே ॥ **1.2.8** ॥

ஓதி ஆயிர நாமங்கள் உணர்ந்தவர்க்கு ⋆
உறு துயர் அடையாமல் ⋆
ஏதம் இன்றி நின்றருளும் நம் பெரும் தகை ⋆
இருந்த நல் இமயத்து ⋆
தாது மல்கிய பிண்டி விண்டலர்கின்ற ⋆
தழல் புரை எழில் நோக்கி ⋆
பேதை வண்டுகள் எரி என வெருவரு ⋆
பிருதி சென்றடை நெஞ்சே ‖ **1.2.9** ‖

‡ கரிய மா முகில் படலங்கள் கிடந்து ⋆
அவை முழங்கிட ⋆
களிறென்று பெரிய மாசுணம் வரை எனப் பெயர் தரு ⋆
பிருதி எம் பெருமானை ⋆
வரி கொள் வண்டறை பைம் பொழில் மங்கையர் ⋆
கலியனதொலி மாலை ⋆
அரிய இன் இசை பாடும் நல் அடியவர்க்கு ⋆
அரு வினை அடையாவே ‖ **1.2.10** ‖

திரு பரிமளவல்லி சமேத பரமபுருசன் திருவடிகளே சரணம்